Deposition of witness
(Chapter XXIII Code of Criminal Procedure
District Munsif cum Judicial Magistrate Court, Alangudi.
CC No. 135/2023

## Deposition of P.W.2

| | | |
|---|---|---|
| Name | : | சண்முகசுந்தரம் |
| Father's Name | : | களச்சியப்பன் |
| Village | : | பூவரசகுடி |
| Religion | : | இந்து |
| Age | : | **44/2024** |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 15.10.2024**
(எதிரி நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட குவிமுச பிரிவு 317ன் கீழான மனு அனுமதிக்கப்பட்டது)

<u>முதல்விசாரணை</u>

நான் பூவரசகுடி கிராமத்தில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். விபத்து சம்பவத்தில் காயம்பட்டு இறந்துபோன வெங்கடேசன் எனது உறவினர். விபத்து சம்பவத்தில் காயமடைந்த மணிகண்டன், பைசல், பர்கான் ஆகியோரையும் தெரியும். கடந்த **2023**ஆம் வருடம் **6**வது மாதம் தேதி ஞாபகம் இல்லை. ஒருநாள் மாலை சுமார் **6.30** மணியளவில் நான் வீட்டில் இருந்தபோது என் வீட்டிற்கு அருகில் வசிக்கும் குணசேகரன் என்பவரது வீட்டில் சத்தம் கேட்டு நான் அங்கு சென்று என்னவென்று கேட்டபோது குணசேகரன் மகன் வெங்கடேசன் என்பவருக்கு விபத்து ஏற்பட்டுவிட்டதாக சொன்னார்கள். வெங்கடேசன் என்பவர் அவரது நண்பரான மணிகண்டன் என்பவருடன் வெள்ளி நகை வியாபாரத்திற்காக அறந்தாங்கி, கறம்பகுடி ஆகிய பகுதிகளுக்கு மணிகண்டனின் இயான் காரில் சென்றுவிட்டு திரும்பி வரும்போது அக்னி ஆற்றுப்பாலம் அருகில் எதிரே வந்த தோஸ்த் வாகனம் மோதி விபத்து ஏற்பட்டதாக தெரிந்துக்கொண்டேன். விபத்திற்குள்ளான **1872** என்ற பதிவெண் கொண்ட காரினை வெங்கடேசன் ஓட்டி வந்துள்ளார். விபத்து ஏற்படுத்திய தோஸ்த் வாகனத்தின் பதிவெண் **2905** என்றும், அதனை ஓட்டி வந்த நபர் கொண்டிகுளத்தை சேர்ந்த அரவிந்தன் என்று தெரிந்துக்கொண்டேன். தகவல் தெரிந்து அறந்தாங்கி அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். காயமடைந்த வெங்கடேசனுக்கு தலையில் காயம் ஏற்பட்டும், வலதுகால் முறிந்தும் இருந்தது. அவருடன் காரில் வந்த மணிகண்டன், பைசல், பர்கான் ஆகிய **3** பேருக்கும் அதிகமான காயம் ஏற்பட்டிருந்தது. அன்றைய தினமே இரவு **7.45** மணிப்போல சிகிச்சையில் இருந்த வெங்கடேசன் மருத்துவமனையில் இறந்துவிட்டார். மற்ற மூவரும்

காயங்களுடன் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார்கள். விபத்து நடந்த மறுநாள் வெங்கடசனுக்கு நடந்த பிரேத விசாரணையின்போது போலீசார் என்னை விசாரித்தனர். நடந்த விபரம் கூறினேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

வெங்கடேசனின் இறப்பு நிகழ்வில் நான் கலந்துகொண்டேன். நான் கேள்விப்பட்டதுபோல் விபத்து நடக்கவில்லை என்றாலும், எதிரியின் கவனக்குறைவினால் விபத்து நடக்கவில்லை, இறந்துபோன வெங்கடேசன் கவனக்குறைவாக காரை ஓட்டிச்சென்றதாலேயே விபத்து ஏற்பட்டது என்றாலும் சரியல்ல.

<u>ம.வி.இல்லை</u>